செய்தி வெளியீடு எண் : 81 நாள் :29.09.2021

**தேனி மாவட்டம்**
**நெல் கொள்முதல் தொடர்பான பயிற்சி வகுப்பு**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள்**
**தலைமையில் நடைபெற்றது :-**

******

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் நெல் கொள்முதல் தொடர்பாக கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று (29.09.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இப்பயிற்சி வகுப்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

தமிழகத்தில் நெல்பயிரிடும் விவசாயிகள் பயனடையும் வகையில் தமிழக அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினால் அந்தந்த மாவட்டங்களில் இந்திய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் நேரடிநெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் பணிகள் நடைபெற்று வருகிறது.

விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் எளிதில் பதிவு செய்து கொண்டு நெல் விற்பனை செய்யஏதுவாக, ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள e-DPC இணையத்தில் எதிர்வரும் கொள்முதல் பருவம் 2021-2022-ஆண்டிற்கு 01.10.2021 முதல் இணையதளத்தில் பதிவேற்றம் செய்து கொள்முதல் செய்ய வேண்டிய தேதியினை முன்பதிவு செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டவுடன் விவசாயிகள் நிலம் இருக்கும் கிராமங்களின் அடிப்படையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இணையவழியின் மூலமாகவே கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் உதவி வோளண்மை அலுவலர்களின் ஒப்புதல் பெறப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையத்தின் பெயர், நெல் விற்பனை செய்யப்படும் நாள் மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் விவசாயிகளின் அலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் அனுப்பப்பட வேண்டும்.

இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டுள்ள கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் இப்பயிற்சியினை நன்கு பயன்படுத்திக் கொண்டு விவசாயிகள் விளைவித்த நெல்லை கொள்முதல் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

விவசாயிகள் தங்களது பெயர், ஆதார் எண், புலஎண், வங்கி கணக்கு எண் உள்ளிட்ட விவரங்களை www.tncsc.tn.gov.in மற்றும் www.tncsc-edpc.in ஆகிய இணையதளத்தில் பதிவேற்றம் செய்வது குறித்து கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சி வகுப்பில், மாவட்ட வருவாய் அலுவலர் க.ரமேஷ், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் அழகுநாகேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) விஷ்ணு ராம்மேத்தி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக துணை மண்டல மேலாளர் எஸ்.அவ்வைமணி, துணை மேலாளர் (கணக்கு) எஸ்.மணிகண்டன், உதவி மேலாளர் (வாணிபம்) கே.வடிவேல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள, உதவி வோளண்மை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**